(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 8(2).]

# பாராளுமன்றம்

## 8ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2013 ஏப்பிறல் 24 புதன்கிழமை வெளியிடப்பட்டது

## 2013 மே 07, செவ்வாய்க்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— ஏற்றுமதி, இறக்குமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரை மற்றும் 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க ஏற்றுமதி, இறக்குமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவு மற்றும் 14 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு 2013 ஏப்பிறல் 03 ஆம் திகதிய 1804/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.04.24ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. )

*

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— காணி அபிவிருத்திக் கட்டளைச்சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1969 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், 1981 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், 1993 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், 1995 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், 1996 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தப்பட்டவாறான காணி அபிவிருத்திக் கட்டளைச்சட்டத்தின் 155 ஆம் 156 ஆம் பிரிவுகளின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2012 திசெம்பர் 07 ஆம் திகதிய 1787/36 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.04.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*

சுரங்கங்கள், கனிப்பொருட்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

## 2013 மே 21, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2497/ '12

கௌரவ தயாசிறி ஜயசேகர,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) அரிசி மாவைப் பயன்படுத்தி பான், பனிஸ் உள்ளிட்ட பேக்கரி உற்பத்திகளை பிரபல்யமடையச் செய்வதற்காக 2005 ஆம் ஆண்டு தொடக்கம் 2012 ஆம் ஆண்டு வரை அரசாங்கம் ஒதுக்கிய பணத் தொகை வருட வாரியாக தனித்தனியாக எவ்வளவென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி உற்பத்திகளைச் செய்வதற்காக கொள்வனவு செய்யப்பட்டுள்ள இயந்திர சாதனங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு இயந்திர சாதனத்தினதும் பெறுமதி தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(iii) இவை பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ள நபர்கள் அல்லது நிறுவனங்கள் யாவையென்பதையும்;

(iv) தற்போது மேற்படி இயந்திர சாதனங்களின் நிலைமை எவ்வாறுள்ளது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) அரிசி மா சார்ந்த பேக்கரி உற்பத்திகள் தற்போது பெற்றுள்ள முன்னேற்றம் யாதென்பதையும்;

(ii) கோதுமை மா பேக்கரி உற்பத்திகளுக்குப் பதிலாக அரிசி மா பேக்கரி உற்பத்திகளின் பாவனையை நாட்டில் முழுமையாக ஏற்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2975/ '12

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) கல்வி அதிகாரிகள் பொறுப்பின்றி செயலாற்றியமையின் காரணமாக மாத்தறை கல்வி வலயத்தில், 2012 ஆம் ஆண்டு இரண்டாம் தவணைப் பரீட்சைக்காக 2009ஆம் ஆண்டு வழங்கிய பரீட்சை வினாத்தாளொன்று மீண்டும் வழங்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) கல்வித்துறையில் இவ்வாறான சிக்கலான நிலைமைகள் தோன்றுவதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) இவ்வாறான நிலைமைகளுக்கு பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பில் தேவையான நடவடிக்கைகளை எடுப்பாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3065/ '12

கௌரவ அஜித் பி. பெரேரா,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசியலமைப்பின் பிரகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு நியமிக்கப்படவேண்டிய அங்கத்தவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி அங்கத்தவர்களுக்குரிய கடமைகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி அங்கத்தவர்களை நியமிக்கும் பொறுப்பு அரசியலமைப்பின் மூலம் யாருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது என்பதையும்;

(iv) தேர்தல்கள் ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் ஏற்கனவே நியமிக்கப்பட்டுள்ளார்களா என்பதையும்;

(v) இன்றேல், இந்தச் சட்டப் பொறுப்புக்களைப் புறக்கணிப்பதற்கான காரணம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3143 / '12

கௌரவ ஆர்.எம்.ரஞ்சித் மத்தும பண்டார,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) சுமார் நாற்பத்து மூன்று இலட்சம் பாடசாலை மாணவர்களில் உயர் கல்விக்கான வரத்தை பெறுகின்றவர்களின் சதவீதம் யாதென்பதையும்;

(ii) உலகத்தின் ஏனைய நாடுகளுக்கு ஒப்பீட்டளவில் மேற்படி சதவீதமானது ஆகக் குறைந்த மட்டத்தில் உள்ளதென்பதை எற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) கல்விக்காக 2012 ஆம் ஆண்டைத் தவிர கடந்த 20 ஆண்டுகளில் செலவிடப்பட்ட பணத் தொகை அந்தந்த வருடங்களின் மொத்த உள்நாட்டு வருமானத்தின் சதவீதமாக தனித் தனியாக எவ்வளவென்பதையும்;

(iv) 2012 ஆம் ஆண்டில் கல்விக்காக அரசாங்கம் ஒதுக்கியுள்ள பணத் தொகை மொத்த உள்நாட்டு வருமானத்தில் எத்தனை சதவீதமென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) பாடசாலைக் கல்விக்காக பெற்றோர்களிடமிருந்து பணம் சேகரித்தல் தற்போது பொதுவாக நடைமுறையிலுள்ள செயற்பாடாகும் என்பதையும்;

(ii) அரசாங்கம் கல்விக்கு போதியளவு பணத்தை ஒதுக்காமையே இதற்கான காரணம் என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) இன்றேல், ஏன்?

3401/ '13

கௌரவ அஜித் குமார,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2009 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் வட்டுவாவளை பிரதேசத்தில் இடம்பெயர்ந்த மக்களை ஒன்றுதிரட்டி, எல்.ரீ.ரீ.ஈ இயக்கத்துடன் ஒரு நாளேனும் தொடர்பு வைத்திருந்தவர்களை சரணடையுமாறு இராணுவத்தால் அறிவிக்கப்பட்டதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதன் பிரகாரம் சரணடைந்த தமிழ் யுவதிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) இவர்களுடைய பெயர்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இராணுவத்தின் மேற்படி அறிவித்தலுக்கமைய 2009.05.16 ஆம் திகதியன்று முல்லைத்தீவு, வட்டுவாவளையில் யோகநாதன் விஜித்தா மற்றும் செல்வரூபன் திருதபன், 2009.05.15 ஆம் திகதியன்று இரட்டைவாய்க்கால், முள்ளிவாய்க்கால் பிரதேசத்தில் அடைன்கலன் சுதாகரன் மற்றும் 2010.09.02 ஆம் திகதியன்று வவுனியா, ஜோசப் முகாமில் கந்தசாமி ஜோதிராசா ஆகியோர் இராணுவத்திடம் சரணடைந்தார்களென்பதை அவர் அறிவாரா?

(இ) அவ்வாறு சரணடைந்த மேற்படி பெயர் குறிப்பிடப்பட்ட ஆட்கள் தொடர்பாக இராணுவம் அல்லது அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3406/ '12

கௌரவ சாந்த பண்டார,— பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குருநாகல் மாவட்டத்தின் அலவ்வ பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசத்திற்குரிய ஹும்புலுவ கிழக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் புராதன குளமொன்று அமைந்துள்ளதென்பதையும்;

(ii) தற்போது மேற்படி குளத்தின் ஒரு பகுதி நிரப்பப்பட்டுள்ளது என்பதையும்;

(iii) மேற்படி குளத்தை அபிவிருத்தி செய்வதன் மூலம் பெரும் எண்ணிக்கையான விவசாயிகளுக்கு நன்மை பயக்குமென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி குளம் அமைந்துள்ள காணி யாருக்கு உரித்தாயுள்ளது என்பதையும்;

(ii) உரிமையாளர்கள் இருப்பின், அதற்குரிய ஆவணங்களை சமர்ப்பிப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3434/ '13

கௌரவ அருந்திக்க பர்னாந்து,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஜா-எல, கபாலகந்த வீதி, கனுவன வத்த, இலக்கம்: 103 இல் வசிக்கும் திரு.ஜே.எம்.சீ.ரத்னாயக்கவின் காணிக்கு தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய பிரிதொரு காணி பகிர்விற்கு எதிராக விதிக்கப்பட்ட இரண்டு தடை உத்தரவுகள் பேலியகொடை பிரிவின் பொலிஸ் அத்தியட்சகர் திரு. மஹேஷ் பெரேராவின் கடுமையான அழுத்தத்தின் மீது நீக்கப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) தடை உத்தரவு அமுலில் இருக்கையில் மேற்படி காணி பகிர்விற்காக குறித்த காணி உரிமையாளர் இராணுவ உத்தியோகத்தர்களுடன் 2012.05.12 ஆம் திகதி வந்துள்ளாரென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்கூறப்பட்டவாறான தனிப்பட்ட பிணக்கில் அரச பாதுகாப்பு பிரிவினர் எவ்வாறு ஈடுபடுத்தப்பட்டனர் என்பதையும்;

(ii) மேற்படி பொலிஸ் அத்தியட்சகரின் செயற்பாட்டுக்கு எதிராக பாதுகாப்பு செயலாளருக்கும், பொலிஸ் மா அதிபருக்கும் குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்கும் செய்யப்பட்டுள்ள எழுத்துமூல முறைப்பாடுகள் தொடர்பிலும் குறித்த பொலிஸ் உத்தியோகத்தருக்கு எதிராகவும் எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) மேற்படி பொலிஸ் அத்தியட்சகர் மேற்படி காணி அளவை தொடர்பில் விடுக்கும் அச்சுறுத்தல்கள் காரணமாக திரு. ஜே.எம்.சீ. ரத்நாயக்கவுக்கு, குடும்ப உறுப்பினர்களுக்கு அல்லது சொத்துக்களுக்கு ஏற்படும் சேதங்களுக்கும் அழுத்தத்தின் மீது மேற்கொள்ளப்படுகின்ற காணி அளவையின் போது திரு. ரத்நாயக்கவின் காணிக்கு ஏற்படக்கூடிய சேதங்களுக்கான பொறுப்பை ஏற்கும் தரப்பினர் யார் என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3435/ '13

கௌரவ ரஞ்சன் ராமநாயக்க,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) சவூதி அரேபியாவின் ரியாதில் வீட்டுப் பணிப்பெண்ணாக சேவையாற்றிவிட்டு இலங்கைக்கு வருகை தந்துள்ள கொம்பனித்தெருவைச் சேர்ந்த திருமதி அன்வர் சியானா வெளியிட்டுள்ள தகவல்களுக்கு அமைய அந்நாட்டில் சிறைவைக்கப்பட்டுள்ள இலங்கை வீட்டுப் பணிப்பெண்கள் சுமார் 50 பேர் விபச்சாரத் தொழிலில் ஈடுபடுத்தப்படுவதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) ஆமெனில், அது தொடர்பாக கண்டறிவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) இவர்களை விடுவித்து உடனடியாக இலங்கைக்கு அழைத்துவருவதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி வீட்டுப் பணிப்பெண்களை அநாதரவான நிலையில் கைவிடுவதற்குச் செயற்பட்டுள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்கள் மற்றும் அதற்குப் பங்களிப்புச் செய்துள்ள ஏனையோருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி பெண்களின் குடும்பங்களின் பாதுகாப்பு, நலன்புரி மற்றும் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான நடைமுறைச்சாத்தியமான வேலைத்திட்டமொன்றை உடனடியாக அமுல்படுத்த நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3441/ '13

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2013 ஆம் ஆண்டு ஜனவரி மாதமளவில் அம்பாந்தோட்டை துறைமுகத்திற்காக சீனாவிடமிருந்து மேலதிகமாக 153 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெற்றுக்கொள்ளப்பட்டதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இக்கடன் எந்த நியதிகள் மற்றும் நிபந்தனைகளின் (வட்டி வீதம், கால எல்லை, வேறு கட்டணங்கள்) கீழ் பெற்றுக்கெள்ளப் பட்டது என்பதையும்;

(ii) எவ்வங்கியிடமிருந்து இக்கடன் பெற்றுக்கொள்ளப்பட்டது என்பதையும் தரகர்கள் சம்பந்தப்பட்டிருப்பின் அவர்கள் உள்நாட்டவர்களா அல்லது வெளிநாட்டவர்களா என்பதையும்;

(iii) அனைத்து மூலங்களிலிருந்தும் இதுவரை அம்பாந்தோட்டை துறைமுகத்திற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட மொத்தக் கடன் மற்றும் அவை ஒவ்வொன்றினும் நியதிகள் மற்றும் நிபந்தனைகள் யாவை என்பதையும்;

(iv) மேலே (iii) இல் குறிப்பிடப்பட்ட ஏதேனும் கடன் நிபந்தனைகள் மூல ஒப்பந்தம் கைசாத்திடப்பட்டதன் பின்னர் எப்போதாவது மாற்றப்பட்டதா என்பதையும்

அவர் கூறுவரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2013 மே 22, புதன்கிழமை
# வாய்மூல விடைக்கான வினாக்கள்

1935/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— பெற்றோலியக் கைத்தொழில்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2011 ஆம் ஆண்டு மே மாதம் முதல் யூலை மாதம் வரை தரக்குறைவான பெற்றோல் மற்றும் ஏனைய பெற்றோலிய உற்பத்திகளை இலங்கைக்கு விநியோகித்தவர் அல்லது விநியோகித்தவர்களையும்;

(ii) இந்த முறைகேட்டிலிருந்து அமைச்சு எவ்வாறு தவிர்க்கப்பட்டது என்பதையும்;

(iii) தரக்குறைவான பெற்றோல் உபயோகத்தால் பாதிப்புக்குள்ளான நுகர்வோரின் எண்ணிக்கையையும்;

(iv) தரக்குறைவான பெற்றோல் காரணமாக ஏற்பட்ட சேதங்கள் தொடர்பாக முறைப்பாடுகளை மேற்கொண்ட வாடிக்கையாளரின் பெயர்களையும்;

(v) பாதிப்படைந்த ஒவ்வொரு நுகர்வோருக்கும் வழங்கிய நட்டஈட்டை வெவ்வேறாகவும்;

(vi) தரம் குறைந்த பெற்றோல் காரணமாக இயந்திரங்கள் பழுதடைந்த எரிபொருள் நிலையங்களின் எண்ணிக்கையையும்;

(vii) அவ்வாறான எரிபொருள் நிலையங்களுக்கு எவ்வாறு நட்டஈடுகள் வழங்கப்படுகின்றன என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) தரக்குறைவான பெற்றோல் சூழ்ச்சித் திட்டத்தை வெளிச்சத்திற்கு கொண்டுவந்த தரப்பினருக்கு கவர்ச்சிகரமான மிகையூதியமொன்று வழங்கப்படுமா என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2977/ '12

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபன நிர்வாகத்தினால் மேற்கொள்ளப்பட்ட நிதி மோசடி தொடர்பாக ஏற்புடைய அலுவலர்களினால் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளுக்கு எழுத்துமூல சான்றுகளுடன் விடயங்கள் முன்வைக்கப்பட்டிருந்த போதிலும், இற்றைவரை அதற்கு எவ்விதமான பிரதிபலிப்பும் கிடைக்கவில்லையென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபன நிர்வாகத்தினால் இன்றளவில் மோசடி செய்யப்பட்டுள்ள பணத்தொகை மற்றும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை பற்றிய சரியான புள்ளிவிபரத் தகவல்கள் அடங்கிய அறிக்கையொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(ii) ஏற்புடைய அதிகாரிகளினால் நிதி மோசடிகளுடன் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் தொடர்பாக இதுவரை நடவடிக்கை எடுக்கப்படாமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iii) இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் மோசடியான உத்தியோகத்தர் களுக்கு மக்கள் பணத்தை சூரையாடுவதற்கு இடமளிக்காமல் இவர்களுக்கு எதிராக செயலாற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3066/ '12

கௌரவ அஜித் பி.பெரேரா,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மத்திய மாகாண சபையைத் தாபித்து அதன் நடவடிக்கைகள் ஆரம்பித்து வைக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) மத்திய மாகாண சபையினால் இதுவரை நிறைவேற்றப்பட்டுள்ள நியதிச்சட்டங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு நியதிச்சட்டத்தினதும் பெயர், இலக்கம் மற்றும் நிறைவேற்றப்பட்ட திகதி வெவ்வேறாக யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்படி மாகாண சபையினால் நிறைவேற்றப்பட்ட,

(i) அரசியலமைப்பின் ஒன்பதாம் அட்டவணையின் I ஆம் நிரலின் (மாகாண சபை நிரலின்) விடயங்களுக்குரிய நியதிச் சட்டங்கள்;

(ii) அரசியலமைப்பின் ஒன்பதாம் அட்டவணையின் III ஆம் நிரலின் (ஒருங்கியை நிரலின்) விடயங்களுக்குரிய நியதிச்சட்டங்கள் யாவையென்பதை

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) அரசியலமைப்பின் மூலம் மாகாண சபைகளுக்கு விசேடமாக ஒப்படைக்கப்பட்டுள்ள விடயங்கள் மற்றும் பணிகள் தொடர்பாக நியதி சட்டங்களை நிறைவேற்றுதல் குறைவாகவே நடைபெறுகின்றதென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3200/ '12

கௌரவ பி. ஹரிசன்,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) வட மத்திய மாகாண சபையினால் அநுராதபுர மாவட்டத்தில் நிர்மாணிக்கப் பட்டுள்ள பால் விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி பால்விற்பனை நிலையங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ள இடங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி பால் விற்பனை நிலையமொன்றை நிர்மாணிப்பதற்கு செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி பால் விற்பனை நிலையங்களின் மாடுகளின் புகைப்படங்களுக்கு மேலதிகமாக வேறு ஆட்களின் புகைப்படங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், அப்புகைப்படங்கள் யாருடையதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இன்றளவில் மக்கள் பயன்பாட்டுக்காக திறக்கப்பட்டுள்ள மேற்படி பால் விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) பயன்படுத்தப்படாது மூடப்பட்டிருக்கும் பால் விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி பால் விற்பனை நிலையங்களை பேணிவரும் பொருட்டு ஆட்சேர்க்கப்பட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி ஊழியர்களின் நியமனங்கள் நிரந்தர, தற்காலிக மற்றும் சேவை தேவைப்பாடுகள் ஆகிய அடிப்படைகளில் எந்த அடிப்படையின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதையும்;

(v) மேற்படி பால் விற்பனை நிலையங்களுக்கு பால் விநியோகிக்கும் நிறுவனங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3403/ '13

கௌரவ அஜித் குமார,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மட்டக்களப்பு, முரக்கட்டான்சேனையைச் சேர்ந்த செல்லப்பிள்ளை மஹேந்திரன் எனப்படுபவர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளாரா என்பதையும்;

(ii) ஆமெனில், குறித்த சிறைச்சாலை யாதென்பதையும்;

(iii) இவர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளது ஒரு சிறைக்கைதியாகவா அல்லது சந்தேக நபராகவா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இவர் கைது செய்யப்பட்ட திகதி, இடம் மற்றும் யாரால் கைது செய்யப்பட்டார் என்பதையும்;

(ii) இவரை கைது செய்வதற்கான காரணம் மற்றும் அதற்கேற்புடைய சட்டம் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மஹேந்திரன் என்பவருக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கு ஏதுவான குற்றச்சாட்டுகள், வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட திகதி, வழக்கு இலக்கம் மற்றும் நீதிமன்றம் யாவையென்பதையும்;

(iii) மேற்படி வழக்கின் தற்போதைய நிலைமை யாதென்பதையும்;

(iv) மேற்படி நபரை விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்:

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3436/ '13

கௌரவ ரஞ்சன் ராமநாயக்க,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பொத்துஹெர பிரதேசத்தில் வசித்துவந்த வலிமுனிதேவகே சிலாவதீ என்பவர் சவூதி அரேபியாவில் சேவையாற்றியபோது உயிரிழந்துள்ளார் என்பதையும்;

(ii) இவரின் மரணம் கழுத்துப்பட்டியால் கழுத்தை நெருக்கியதன் காரணமாக இடம்பெற்றுள்ளதென மரண விசாரணையின்போது தெரியவந்துள்ளது என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) சீலாவதீ என்பவரின் மரணம் தொடர்பான விசாரணை அறிக்கையை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(ii) மேற்படி மரணம் தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி உயிரிழந்தவருக்கு உரித்தாக வேண்டிய காப்புறுதி உரிமைகள் மற்றும் நட்டஈட்டுத்தொகையை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3442/ '13

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) வீதி நிர்மாணக் கருத்திட்டங்களுக்காக அரசாங்கம் உள்நாட்டு வர்த்தக வங்கிகளில் கடன்களை பெற்றுக்கொள்ள ஆரம்பித்திருக்கின்றது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) அனைத்து உள்நாட்டு வர்த்தக வங்கிகளிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட மொத்தக் கடன் தொகை, அவற்றிற்கான கால எல்லை, வட்டி வீதம் மற்றும் வேறு நிபந்தனைகள் என்பனவற்றை தனித்தனியாக அவர் கூறுவரா ?

(இ) இன்றேல், ஏன்?

2978/ '12

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) சிவில் விமான சேவைகள் அதிகார சபை தாபிக்கப்பட்டு 10 வருடங்கள் கடந்துள்ள நிலையிலும் இதுவரை மேற்படி நிறுவனத்துக்கு நிரந்தரமான கட்டடமொன்று இல்லையென்பதையும்;

(ii) மேற்படி அதிகாரசபையின் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளினால் அரச நிதி முறைசாரா விதத்திலும் கவனயீனமாகவும் செலவு செய்யப்பட்டுள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) கடந்த 10 வருடங்களாக சிவில் விமான சேவைகள் அதிகாரசபை பேணிவரப்படுகின்ற கட்டடத்துக்கு செலுத்தப்பட்டுள்ள வாடகைத் தொகை எவ்வளவென்பதையும்;

(ii) நிலத்துக்கான வாடகையாக பெருமளவிலான குத்தகைத் தொகையை செலுத்தும் மேற்படி அதிகாரசபைக்காக நிரந்தரமான கட்டடமொன்றை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) மேற்படி நிறுவனத்தின் நிதியை கவனயீனமாகக் கையாண்ட அதிகாரிக்கு எதிராக ஏதேனும் நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3067/ '12

கௌரவ அஜித் பி. பெரேரா,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வட மத்திய மாகாண சபையைத் தாபித்து அதன் நடவடிக்கைகள் ஆரம்பித்து வைக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) வட மத்திய மாகாண சபையினால் இதுவரை நிறைவேற்றப்பட்டுள்ள நியதிச்சட்டங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு நியதிச்சட்டத்தினதும் பெயர், இலக்கம் மற்றும் நிறைவேற்றப்பட்ட திகதி வெவ்வேறாக யாதென்பதையும்,

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்படி மாகாண சபையினால் நிறைவேற்றப்பட்ட,

(i) அரசியலமைப்பின் ஒன்பதாம் அட்டவணையின் I ஆம் நிரலின் (மாகாண சபை நிரலின்) விடயங்களுக்குரிய நியதிச் சட்டங்கள்;

(ii) அரசியலமைப்பின் ஒன்பதாம் அட்டவணையின் III ஆம் நிரலின் (ஒருங்கியை நிரலின்) விடயங்களுக்குரிய நியதிச்சட்டங்கள்

யாவையென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2013 மே 23, வியாழக்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

2201/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) களுத்துறை மாவட்டத்தில் 2011ஆம் ஆண்டில் அமைச்சினால் கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) 2012, 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் நிர்மாணிக்க எதிர்பார்க்கப்படுகின்ற வீடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்குறிப்பிட்ட வீட்டு நிர்மாணத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள பணத்தொகை யாதென்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) புதிதாகக் கட்டப்பட்ட வீடுகள் இலவசமாகவா வழங்கப்படுகின்றன என்பதையும்;

(ii) இன்றேல், அவ்வீடுகள் விற்கப்படும் அல்லது வாடகைக்கு விடப்படும் விலையினையும்;

(iii) அந்த வீடுகள் என்ன அடிப்படையில் ஒதுக்கப்படுகின்றன என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2504/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) வட மாகாணத்தில் சம்பத்நுவர பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசத்தில் அமைந்துள்ள ஜனகபுர வித்தியாலயத்தின் பௌதீக வளங்கள் மற்றும் மனித வளங்களில் பற்றாக்குறைகள் நிலவுகின்றன என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) ஜனகபுர வித்தியாலயத்தில் நிலவுகின்ற பௌதீக வளங்கள் மற்றும் மனித வளங்களின் பற்றாக்குறைகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி குறைபாடுகளை நிவர்த்திசெய்ய நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) ஆமெனில் அதற்காக கழியும் காலம் எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2634/ '12

கௌரவ தயாசிறி ஜயசேகர,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2012 ஆம் ஆண்டின் மாச்சு, ஏப்பிறல் மாதங்களில் இலங்கையில் நடத்தப்பட்ட டெஸ்ட் கிரிக்கட் போட்டித் தொடரில் உள்ளடங்கிய போட்டிகளின் எண்ணிக்கை யாவையென்தையும்;

(ii) மேற்படி போட்டிகள் நடாத்தப்பட்ட விளையாட்டரங்குகள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு விளையாட்டரங்கிலும் பார்வையாளர் கூடங்களிலுள்ள ஆசனங்களின் எண்ணிக்கை யாவையென்பதையும்;

(iv) மேற்படி விளையாட்டரங்குகளில் ஆசனங்களுக்காக அறவிடப்பட்ட கட்டணங்கள் யாவையென்பதையும்;

(v) இப்போட்டித் தொடரைக் கண்டுகளிப்பதற்காக சந்தைப்படுத்திய டிக்கெட் ஒன்றின் விலை யாதென்பதையும்;

(vi) மேற்படி டிக்கெட்டின் செல்லுபடியாகும் காலப்பகுதி யாதென்பதையும்;

(vii) மேற்படி விளையாட்டரங்குகளில் பார்வையாளர் ஆசனமொன்றுக்கான குறைந்தபட்ச பணத்தொகையாக ரூபா. 5000.00 அறவிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(viii) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3068/ '12

கௌரவ அஜித் பி. பெரேரா,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஊவா மாகாண சபையைத் தாபித்து அதன் நடவடிக்கைகள் ஆரம்பித்து வைக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) ஊவா மாகாண சபையினால் இதுவரை நிறைவேற்றப்பட்டுள்ள நியதிச்சட்டங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு நியதிச்சட்டத்தினதும் பெயர், இலக்கம் மற்றும் நிறைவேற்றப்பட்ட திகதி வெவ்வேறாக யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்படி மாகாண சபையினால் நிறைவேற்றப்பட்ட,

(i) அரசியலமைப்பின் ஒன்பதாம் அட்டவணையின் I ஆம் நிரலின் (மாகாண சபை நிரலின்) விடயங்களுக்குரிய நியதிச் சட்டங்கள் யாவை என்பதையும்;

(ii) அரசியலமைப்பின் ஒன்பதாம் அட்டவணையின் III ஆம் நிரலின் (ஒருங்கியை நிரலின்) விடயங்களுக்குரிய நியதிச்சட்டங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3286/ '12

கௌரவ கயந்த கருணாதிலக்க,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இணைந்த சேவைக்கு உரித்தான அரசாங்க மொழி பெயர்ப்பாளர் சேவையில் பாரிய உத்தியோகத்தர் பற்றாக்குறை நிலவுகின்றது என்பதையும்;

(ii) மேற்படி சேவையில் இணைவதற்கும் சேவையில் நிலைத்து நிற்பதற்கும் உற்சாகமளிக்கு வகையில் சம்பளம் மற்றும் சிறப்புரிமைகள் வழங்கப்படாமையினால் வெளியிலிருந்து நபர்கள் சேவைக்குள் ஈர்க்கப்படாமையும், சேவையில் இணைந்து கொண்டவர்களும் தொடர்ச்சியாக சேவையை விட்டு நீங்கிச் செல்வதும் மேற்படி உத்தியோகத்தர் பற்றாக்குறைக்கான காரணங்களாகும் என்பதையும்;

(iii) 06/2006 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் மூலம் ஒட்டுமொத்த சேவையும், முன்னர் அதற்கு சமமான மட்டத்தில் காணப்பட்ட ஏனைய சேவைகளுடன் ஒப்பிடுகையில் சம்பள அளவுத் திட்டங்களைப் பொறுத்தவரை கீழ் மட்டத்துக்கு தள்ளப்பட்டுள்ளதென்பதையும்;

(iv) இந்த நிலைமையானது மும்மொழி ரீதியிலான இலங்கையை முன்னிட்டான வேலைத்திட்டத்துக்கு முற்றிலும் முரணானது என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி மொழிபெயர்ப்பாளர் சேவை இழந்துள்ள உரிய வரவேற்பையும் சேவை அந்தஸ்தினையும் மீண்டும் பெற்றுக்கொடுப்பதற்கு தற்போது ஏதேனும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்கொள்ளப்பட்டுள்ள குறித்த நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி நடவடிக்கைகளை நடைமுறைப்படுதும் திகதி யாது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3335/ '12

கௌரவ (திருமதி) அனோமா கமகே,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2012 சனவரி மாதம் தொடக்கம் இற்றை வரை வீசா இன்றி சட்டவிரோதமாக நாட்டை விட்டு வெளியேறும் நடவடிக்கைகள் துரிதமாக அதிகரித்துள்ளதென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) மேற்படி காலகட்டத்தினுள் சட்டத்தின் பிடியில் சிக்கவைக்கப்பட்ட சட்டவிரோத குடியகல்வோரின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி சட்டவிரோத குடியகல்வு நடவடிக்கை மேற்கூறப்பட்ட காலகட்டத்திற்கு முன்னரும் இடம்பெற்றுள்ளதா என்பதையும்;

(ii) இல்லையெனில், மேற்படி நடவடிக்கை அண்மைக்காலத்தில் ஆரம்பிக்கப்பட்டதா என்பதையும்;

(iii) சட்டவிரோத குடியகல்வோரை சட்டத்தின் பிடியில் சிக்கவைப்பதற்கு இதற்கு முன்னர் நடவடிக்கை எடுக்காதிருந்தமைக்குரிய காரணங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3404/ '13

கௌரவ அஜித் குமார,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மட்டக்களப்பு, நாவற்காட்டில் வசிக்கும் மாலரத்னம் சிங்கராசா என்பவர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளாரா;

(ii) ஆமெனில், குறித்த சிறைச்சாலை யாது;

(iii) இவர் சிறையில் அடைக்கப்பட்டிருப்பது ஒரு சிறைக்கைதி என்ற ரீதியிலா அல்லது ஒரு சந்தேக நபர் என்ற ரீதியிலா;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இவர் கைது செய்யப்பட்ட திகதி, இடம் மற்றும் இவரைக் கைதுசெய்தவர்கள் யார்;

(ii) இவரை கைது செய்வதற்கு ஏதுவான குற்றச்சாட்டு மற்றும் ஏற்புடையதான சட்டம் யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மாலரத்னம் சிங்கராசா என்பவருக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், இதற்கு ஏதுவான குற்றச்சாட்டுக்கள், வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட திகதி, வழக்கு இலக்கம் மற்றும் நீதிமன்றம் யாது;

(iii) மேற்படி வழக்கின் தற்போதைய நிலைமை யாது;

(iv) குறித்த நபரை விடுதலை செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3069/ '12

கௌரவ அஜித் பி. பெரேரா,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சப்பிரகமுவ மாகாண சபையைத் தாபித்து அதன் நடவடிக்கைகள் ஆரம்பித்து வைக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) சப்பிரகமுவ மாகாண சபையினால் இதுவரை நிறைவேற்றப்பட்டுள்ள நியதிச்சட்டங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு நியதிச்சட்டத்தினதும் பெயர், இலக்கம் மற்றும் நிறைவேற்றப்பட்ட திகதி வெவ்வேறாக யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்படி மாகாண சபையினால் நிறைவேற்றப்பட்ட,

(i) அரசியலமைப்பின் ஒன்பதாம் அட்டவணையின் I ஆம் நிரலின் (மாகாண சபை நிரலின்) விடயங்களுக்குரிய நியதிச் சட்டங்கள் யாவை என்பதையும்;

(ii) அரசியலமைப்பின் ஒன்பதாம் அட்டவணையின் III ஆம் நிரலின் (ஒருங்கியை நிரலின்) விடயங்களுக்குரிய நியதிச்சட்டங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3070/ '12

கௌரவ அஜித் பி. பெரேரா,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வடமேல் மாகாண சபையைத் தாபித்து அதன் நடவடிக்கைகள் ஆரம்பித்து வைக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) வடமேல் மாகாண சபையினால் இதுவரை நிறைவேற்றப்பட்டுள்ள நியதிச்சட்டங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு நியதிச்சட்டத்தினதும் பெயர், இலக்கம் மற்றும் நிறைவேற்றப்பட்ட திகதி வெவ்வேறாக யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்படி மாகாண சபையினால் நிறைவேற்றப்பட்ட,

(i) அரசியலமைப்பின் ஒன்பதாம் அட்டவணையின் I ஆம் நிரலின் (மாகாண சபை நிரலின்) விடயங்களுக்குரிய நியதிச் சட்டங்கள்;

(ii) அரசியலமைப்பின் ஒன்பதாம் அட்டவணையின் III ஆம் நிரலின் ( ஒருங்கியை நிரலின்) விடயங்களுக்குரிய நியதிச்சட்டங்கள்

யாவையென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?